## ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைப்பு அதிகாரசபை - 2015

ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைப்பு அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 29 ஆம் இலக்க ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 8(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கணக்காய்வு கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்தும் காரணமாக ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைப்பு அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

**இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,360,000 தொகையான தரவு முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 2,838,000 நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அது மூலதனமாக்கப்பட்டு மீளாய்வாண்டிற்காக ரூபா 684,271 பெறுமானத்தேய்வாக நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களை உள்ளடக்கிய 05 சொத்து வகுப்புகளுக்குரிய தெரிவு செய்யப்பட்ட பகுதியொன்று மாத்திரம் மீள் மதிப்பிடு செய்யப்பட்டிருந்த போதிலும், ஒட்டுமொத்த சொத்துக்களுக்குரிய கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு என்பன கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அண்மைய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்ததுடன் அச் சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமையினால் அதன் பாதுகாப்பு கேள்விக்குரியதாக இருந்தது.

(இ) அதிகாரசபையினால் கிரய மாதிரியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அளவிடப்படுவதாக அதிகாரசபையின் கணக்கீட்டுக் கொள்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் 05 வகுப்புக்களின் ரூபா 18,409,588 கிரயமான சொத்துக்களில் 1118 அலகுகளின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 6,186,610 இற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மூலதன வடிவில்லாத வாகன உதிரிப் பாகங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 446,155 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் அதன் அடிப்படையில் பெறுமானத்தேய்வும் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரியினால் மானியமாக 2011 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட ரூபா 17,135,000 கிரயமாக 03 வாகனங்களின் பெறுமதி மானியமாகக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் இந்த சொத்துக்களில் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 6,835,374 ஆக இருந்த போதிலும், அது தொடர்பாக காலக் கழிவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அழிவுக்குள்ளாகிய ஆதனங்களை மீளமைப்பதற்காக திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 63,000,000 மானியத் தொகை உரிய தரப்பினர்களுக்கு விடுவிக்கும் போது அது செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செலுத்தப்பட்ட பணம் தொடர்பாக காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் ஒன்றிணைந்த கடன் உத்தேசத்திட்டத்தின் கீழ் கடன் வசதிகளை வழங்குவதற்காக திறைசேரியிலிருந்து கிடைத்த, மீண்டும் திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய ரூபா 738,544,380 தொகையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளாக ரூபா 1,637,949 மீதியொன்று காண்பிக்கப்பட்ட போதிலும், அத்திகதியில் உள்ளவாறான காசேட்டின் பிரகாரம் ரூபா 38,095,925 மீதியும், சேமிப்புக் கணக்கில் ரூபா 96,969,400 தொகையும் காணப்பட்டமையால் காசும் காசுக்குச் சமமானவைகளுக்குமிடையே ரூபா 133,427,376 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் அத்திகதியில் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றில் முன்னைய மாதத்தில் 74757297 ஆம் இலக்க கணக்கிற்கு மாற்றப்பட்டதாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 133,839,840 தொகையை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 பெறவேண்டிய கணக்குகள்**

1983 யூலை காலவரத்தின் காரணமாக இலங்கை வங்கியின் மூலம் வழங்கப்பட்ட வணிகக் கடனை மீளாய்வாண்டில் அறவிடும் முன்னேற்றம் 2.21 சதவீதமான மந்தமான நிலையில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த மீதி ரூபா 4,375,312 ஆகும்.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின்<br>நிதிப்பிரமாணம் 381(I) | வங்கிக் கணக்கு ஆரம்பிப்பதற்காக திறைசேரியிலிருந்து அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சேமிப்புக் கணக்கொன்று திறக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கணக்கின் மீதி ரூபா 96,969,400 ஆக இருந்தது. |

| | |
|---|---|
| (ஆ) 2009 நவம்பர் 18 ஆந் திகதிய 15/2007(I) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | வீடமைப்புக் கடனுக்காக கடன் தொகையின் அடிப்படையில் வட்டி அறவிடப்பட வேண்டிய போதிலும் 4.2 சதவீத வட்டி விகிதம் அறவிடுவதற்கு 2015 திசெம்பர் 11 ஆந் திகதி பணிப்பாளர் சபை தீர்மானத்தில் அதிகாரசபையின் நிதி பயன்படுத்தப்பட்டு 17 பதவியணியினர்களுக்காக ரூபா 12,467,950 கூட்டுத்தொகையான வீடமைப்புக் கடன் திறைசேரியின் அங்கீகாரமின்றி வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 71,663,342 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 119,261,814 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 47,598,573 இனால் குறைவடைந்திருந்தது. அரசாங்க மானியம் ரூபா 86,653,000 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட பற்றாக்குறையின் குறைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் செயற்பாட்டு மிகையொன்று காணப்பட்ட போதிலும், 2012, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது அரசாங்க மீண்டெழும் மானியம் ரூபா 86,653,000 இனால் அதிகரித்திருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது கவனத்திற் கொள்ளக்கூடிய பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைச் சீராக்கியதன் பின்னரும் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் பங்களிப்பு மறைப்பெறுமதி முறையே ரூபா 80,600,892 மற்றும் ரூபா 20,433,541 ஆக இருந்தன. இதன் பிரகாரம் அதிகாரசபை நிதி ரீதியாக வீழ்ச்சியொன்றைக் காண்பித்த போதிலும், அந்த நிலைமையை மாற்றியமைப்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) 1987 இன் 29 ஆம் இலக்க ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைப்பு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் பிரதான நோக்கம் பின்வருமாறு இருந்தது.

(i) பாதிப்பிற்குட்பட்ட ஆட்களை புனர்வாழ்வளிப்பதற்காக நிதியுதவி வழங்குதல்.

(ii) ஏதாவது இழப்பிற்குட்பட்ட ஆதனமொன்றின் உரிமையாளருக்கு அல்லது வாடகை வீட்டாளருக்கு அந்த ஆதனத்தை பழுதுபார்ப்பதற்காக அல்லது மீளமைப்பதற்காக நிதியுதவி வழங்குதல்.

(iii) கட்டிடமொன்றின் அல்லது கட்டமைப்பில் ஏதாவது பாதிப்பிற்குட்பட்ட ஆதனமொன்றை உடைக்குமாறு அல்லது அகற்றுவதற்கு கட்டளையிடல்.

(iv) ஏதாவது இழப்பிற்குட்ட கைத்தொழிலொன்றின் அல்லது வியாபாரமொன்றின் உரிமையாளருக்கு, புனரமைப்பு அதிகாரசபையினால் இணக்கப்பாட்டிற்கு வருமாறு ஏதாவது நியாயமான நிபந்தனைகளின் கீழ் அந்தக் கைத்தொழில்

அல்லது வியாபாரங்களை புனரமைப்பதற்காக அவர்களுக்கு நிதியுதவி வழங்குதல் மற்றும் புனரமைத்தல் செயற்பாடுகளுக்காக ஏற்பட்ட ஏதாவது செலவினமொன்றை அந்த உரிமையாளருக்கு மீளச் செலுத்துதல்.

(ஆ) 2010 ஆகஸ்ட் 19 மற்றும் 2012 மார்ச் 15 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிராகரம் பின்வரும் பணிகள் உரித்தாகின்றது.

(i) சமூகமயப்படுத்தப்பட்ட பயிலுனர்களுக்காக சுயதொழில் கடன் வசதிகளை வழங்குதல்.

(ii) பயங்கரவாத செயற்பாடுகளின் காரணமாக பாதிப்பிற்குட்பட்ட குடும்பங்களுக்காக இலகுக் கடன் முன்மொழிவுத் திட்டமொன்றை அமுல்படுத்துதல்.

(இ) இழப்பிற்குட்பட்டோர்களுக்கு கடன் வழங்குவதற்காக திறைசேரியிலிருந்து கிடைத்த நிதியிலிருந்து வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்தலால் பெறப்பட்ட ரூபா 162,224,943 தொகையான வட்டி சேமிப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 11,683,192 தொகையொன்று நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபை நடாத்திச் செல்லப்பட்ட பழைய அலுவலகக் கட்டிடத்திலிருந்து விலகி 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், வாடகையாக செலுத்தப்பட்ட ரூபா 475,000 வைப்பை வாடகை உரிமையாளரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 24 ஆந் திகதி இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் ரூபா 3,360,000 தொகையில் அதிகாரசபைக்கான தரவு முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த முறைமை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) தொழில் நியாயசபையில் 13/40/2009 ஆம் இலக்க வழக்கின் போது அதிகாரசபையினால் நிறுவனத்திற்கு சாதகமான முறையில் விடயங்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் முக்கியமான சான்றுகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பயங்கரவாத செயற்பாடுகள்/ இனவாத பிரச்சினைகளின் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில்களைப் புனரமைப்பதற்காக கடன் வழங்குதல் தொடர்பான 1996 யூன் 23 ஆந் திகதிய ஆர்ஈபீ/1/எல்ஓஎஎன்/2/96 ஆம் இலக்க நிறுவன சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2008 ஆம் ஆண்டில் "வெள்ளநீர்" காரணமாக பாதிப்பிற்குட்பட்ட கைத்தொழில்களுக்கு செலுத்துவதற்காக 2014 திசெம்பர் 10 ஆந் திகதி சிபாரிசு செய்யப்பட்டு ரூபா 5,000,000 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

உயிர் மற்றும் ஆதனங்கள் இழப்பிற்குட்பட்ட ஆட்களுக்காக இலகுக் கடனின் கீழ் பல்வேறு நிறுவனங்கள் ஊடாக கடன் வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் பொதுத் திறைசேரியினால் மீளச் செலுத்தும் அடிப்படையில் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த அடிப்படையில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு

வழங்கிய கடன் கால எல்லை விஞ்சியிருக்கும் போது ரூபா 119,715,000 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டியிருந்தது. இவ்வாறு வழங்கப்பட்ட பணத்திற்காக அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 39,996,461 ஆக இருந்த போதிலும், அது பெறவேண்டிய வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டு அந்த மொத்த வட்டித் தொகையும் கிடைக்கப் பெறாது எனக் கருதி அறவிடமுடியாக் கடனாக ஒதுக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நீண்டகாலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற பணத்தை அறவிடுவது தொடர்பில் அதிகாரசபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(5)(ஈ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமேனும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்தபோது 15 விடயங்களில் 37 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூவமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டில் நலன்புரிச் செலவினத்திற்காக பாதீட்டின் மூலம் ரூபா 500,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான செலவினம் ரூபா 1,116,152 ஆனமையால் மிகைச் செலவினம் 123.23 சதவீதமாக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 42.36 சதவீத அதிகரிப்பாகும்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துக்கள் | நிலையான சொத்துக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாமை மற்றும் சொத்துக்களின் பெறுமதி சரியாகத் தீர்மானிக்கப்படாமை |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே பாரியளவிலான முரண்கள் காணப்பட்டமை |

| | | |
|---|---|---|
| (இ) | இழப்பீடு மற்றும் கடன் செலுத்துதல் | காணப்படுகின்ற சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்கவும் தாமதமின்றியும் இழப்பீடு மற்றும் கடன் செலுத்தாமை |
| (ஈ) | கணக்கீடு | செலவின வகைப்படுத்தல், இருப்புக் கணிப்பீடு செய்தல் மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்காமை. |